கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(ஒக்டோபர்/நவெம்பர் - 2010)

LIBRARY
11 FEB 2011
Eastern University, Sri Lanka.

# TL 202 குறிப்பிடப்பட்ட பாடநூல்கள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. பின்வரும் புறநானூற்றுப் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

“முட் கால் காரை முதுபழன் ஏய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீம் கந்தாரம்
நிறுத்த ஆயம் தலைச் சென்று உண்டு,
பச்சூன் தின்று, பைந்நிணம் பெருத்த
எச்சில் ஈர்ங்கை விற்புரம் திமிரி,
புலம் புக்கனனே, புல் அணற் காளை;
ஒரு முறை உண்ணா அளவை, பெருநிரை
ஊர்ப்புறம் நிறையத் தருகுவன் யார்க்கும்
தொடுதல் ஓம்பு மதி; முது கட்சாடி
ஆதரக் கழுமிய துகனன்,
காய்தலும் உண்டு, அக்கள் வெய்யோனே”

(அ) மேற்குறித்த பாடலின் திணை, துறை யாவை எனக் குறிப்பிடுக.

(ஆ) அவை பற்றி விளக்குக

(இ) பாடலின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

02. கண்ணகியின் புலம்பலூடாக, அவளது மனத்துயர் வெளிப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

03. தான் இறைவன் மீது கொண்டிருந்த அந்நியோன்யமான ஈடுபாட்டினை வெளிப்படுத்த மாணிக்கவாசகர் கையாண்ட வழிவகைகள் யாவை? உமக்குத்தரப்பட்ட பாடற்பகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

04. காளமேகப்புலவரின் தனிப்பாடல்களில் அங்கதச்சுவை வெளிப்படுமாற்றினை பரிசிலீக்குக.

05. மனித உறவின் நெருக்கம் தேம்பாவணியில் 'பிரிந்த மகவைக்காண் படல'த்தினூடாக சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது என்று கூறலாமா? ஆராய்க.

06. மஹாகவியின் ஒரு சாதாரண மனிதனின் சரித்திரத்தை நவீன காவியம் என்று கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமுடையது? ஆராய்க.

07. நாட்டார் வழக்காறுகள் செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் இடம்பெற்றிருக்குமாற்றினை உதாரணங்களூடாக எடுத்துக்காட்டுக.

08. "ந.பிச்சமூர்த்தியின் புதுக்கவிதைகள் தனிமனித உணர்வுகளை மட்டுமன்றி சமூக, அரசியல் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துகின்றன." ஆராய்க.

(20 x 5 = 100 புள்ளிகள்)

********